ரக்ஷா பந்தன்: பிரதமர் மோடிக்கு ராக்கி கட்டிய பள்ளிக் குழந்தைகள்

புது தில்லி, ஆக. 28: சகோதரத்துவத்தைப் போற்றும் ரக்ஷா பந்தன் பண்டிகையையொட்டி, பிரதமர் நரேந்திர மோடிக்கு பள்ளிக் குழந்தைகள் வெள்ளிக்கிழமை ராக்கி கயிறு கட்டினர். மேலும், நாட்டு மக்களுக்கு அவர் வாழ்த்து தெரிவித்தார்.

சகோதரர்கள்-சகோதரிகள் இடையிலான பிணைப்பைக் கொண்டாடும் ரக்ஷா பந்தன் பண்டிகை, வடமாநிலங்களில் வெள்ளிக்கிழமை உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. பெண்கள் தங்களின் சகோதரர்களுக்கு ராக்கி கயிறு கட்டியதுடன், அவர்களின் நல் வாழ்வுக்காக பிரார்த்தனை மேற்கொண்டனர். சகோதரர்கள், தங்களின் சகோதரிகளுக்கு பரிசுப் பொருள்களை வழங்கி அவர்களை மகிழ்வித்தனர்.

இந்தப் பண்டிகையையொட்டி, புது தில்லியில் லோக் கல்யாண் மார்கில் உள்ள பிரதமரின் அதிகாரபூர்வ இல்லத்தில் அவரை பள்ளிக் குழந்தைகள் சந்தித்தனர். பிரதமருக்கு ராக்கி கயிறு கட்டி, வாழ்த்து தெரிவித்தனர். குழந்தைகளின் கைகுலுக்கியும், அவர்களுடன் கைதட்டியும் பிரதமர் மோடி வாஞ்சையுடன் உரையாடினார். அப்போது அவரிடம், 'உங்களின் சிறு வயதுக் கனவு என்ன?' என்று ஒரு குழந்தை எழுப்பிய கேள்விக்கு 'உங்கள் அனைவரையும் சந்திப்பதுதான்' என்று பிரதமர் பதிலளித்தார்.

தனக்கு குழந்தைகள் ராக்கி கயிறு கட்டிய காணொலி மற்றும் புகைப்படங்களை இன்ஸ்டாகிராமில் பகிர்ந்த அவர், 'எனது இல்ல ரக்ஷா பந்தன் கொண்டாட்டத்தில் புன்னகைகளும், கைதட்டல்களும் நிறைந்திருந்தன' என்று பதிவிட்டார்.

எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், 'ரக்ஷா பந்தன் நல்வாழ்த்துகள். இந்த மங்களகரமான பண்டிகை, அனைவரின் வாழ்விலும் மகிழ்ச்சி, வளம், வெற்றியைக் கொண்டுவரட்டும். பாசம், ஒற்றுமை, பரஸ்பர நம்பிக்கை என்றும் நிலைத்திருக்கட்டும்' என்று அவர் தெரிவித்தார்.

1. பள்ளிச் சிறுமிகளுடன் தனது இல்லத்தில் ரக்ஷா பந்தன் கொண்டாடிய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு.
2. குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு ராக்கி கயிறு கட்டிய பள்ளிக் குழந்தைகள்.
3. புது தில்லியில் தனது அரசு இல்லத்தில் பள்ளிக் குழந்தைகளுடன் ரக்ஷா பந்தன் பண்டிகையைக் கொண்டாடிய பிரதமர் நரேந்திர மோடி.

குடியரசுத் தலைவர் மாளிகையில் கொண்டாட்டம்

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தனது மாளிகையில் உள்ள கலாசார மையத்தில் பள்ளிக் குழந்தைகளுடன் ரக்ஷா பந்தன் கொண்டாடினார்.

'ரக்ஷா பந்தன் என்பது உடன்பிறப்புகளின் பிணைப்பையும் தாண்டியதாகும்; அன்பு மற்றும் அக்கறையை வெளிப்படுத்தும் வகையில், பெற்றோர், குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் மரங்களுக்குக்கூட ராக்கி எனும் புனிதகயிறைக் கட்டலாம். சுற்றுச்சூழல் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு, பள்ளிக் குழந்தைகள் மரம் வளர்ப்பதில் ஆர்வம் காட்ட வேண்டும்' என்று குடியரசுத் தலைவர் வலியுறுத்தியதாக அவரது மாளிகை வெளியிட்ட எக்ஸ் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியரசு துணைத் தலைவர் வாழ்த்து

ரக்ஷா பந்தன் பண்டிகையையொட்டி, குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'இந்த மகிழ்ச்சிகரமான தருணமானது, அன்பு, பாசம், ஒற்றுமையின் பிணைப்பை வலுப்படுத்தி, கருணை, நல்லிணக்கம், பரஸ்பர மரியாதை ஆகிய மாண்புகளை உறுதிசெய்ய உத்வேகமளிக்கட்டும். அனைவரின் வாழ்விலும் மகிழ்ச்சி, அமைதி, வளமையைக் கொண்டுவரட்டும்' என்று தெரிவித்துள்ளார்.

லடாக்கில் உயர்நீதிமன்ற அமர்வு: குடியரசுத் தலைவர் பிரகடனம்

லே, ஆக. 28: லடாக் யூனியன் பிரதேசத்தில் ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் உயர்நீதிமன்ற அமர்வு ஒன்றை அமைப்பதற்கான பிரகடனத்தை (உத்தரவு) குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பிறப்பித்துள்ளார்.

புவியியல் ரீதியாக மிகவும் பின்தங்கிய மற்றும் தொலைதூரப் பகுதிகளைக் கொண்ட லடாக் யூனியன் பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கு நீதித் துறை சார்ந்த தீர்வுகள் விரைவாகவும், எளிதாகவும் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற யூனியன் பிரதேச மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் மத்திய சட்ட அமைச்சகம் சார்பில் இதற்கான முன்மொழிவு குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

முன்னதாக, இந்த முன்மொழிவுக்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை கடந்த 20-ஆம் தேதி ஒப்புதல் அளித்தது.

'லடாக் யூனியன் பிரதேசத்தில் உயர்நீதிமன்ற அமர்வை அமைப்பதற்கான ஒழுங்குமுறை 2026' என்ற தலைப்பிலான இந்த முன்மொழிவுக்கான பிரகடனத்தை குடியரசுத் தலைவர் வியாழக்கிழமை பிறப்பித்து, அதே நாளில் அரசிதழிலும் வெளியிடப்பட்டது. இதன்மூலம், லடாக்கில் உயர்நீதிமன்ற அமர்வை அமைப்பதற்கு வழி ஏற்பட்டுள்ளது.

இந்த ஒழுங்குமுறை வழிகாட்டுதலின்படி, உயர்நீதிமன்றத்தின் முதன்மை அமர்வானது, தொடர்ந்து ஜம்மு-காஷ்மீரில் உள்ள உயர்நீதமன்றத்திலேயே தொடர்ந்து செயல்படும். லடாக் யூனியன் பிரதேசத்தில் அனுமதிக்கப்பட்ட இடங்களில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதிபதிகளின் அமர்வுகள் வழக்கு விசாரணைகளை மேற்கொள்ளும். அதே நேரம், லடாக் யூனியன் பிரதேசத்தில் எழும் குறிப்பிட்ட வழக்கை சூழ்நிலைக்கு ஏற்ப ஜம்மு-காஷ்மீரில் உள்ள பிரதான உயர்நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டும் என தனது விருப்பத்தின் பேரில் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி உத்தரவிடவும் இந்த வழிகாட்டுதல் அனுமதிக்கிறது.

இந்தப் பிரகடனத்தை வரவேற்ற லடாக் யூனியன் பிரதேச துணைநிலை ஆளுநர் வினய் குமார் சக்ஸேனா, 'மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்த 7 நாள்களுக்குள், உயர்நீதிமன்ற அமர்வை அமைப்பதற்கான பிரகடனம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. யூனியன் பிரதேச மக்களின் விருப்பம் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மத்திய அரசின் கடமை உணர்வை இந்த உடனடி நடவடிக்கை வெளிப்படுத்துகிறது. இந்த முடிவு, உயர்நீதிமன்றத்தில் தீர்வுகள் மற்றும் நிவாரணம் பெறுவதில் யூனியன் பிரதேச மக்கள் இதுவரை எதிர்கொண்டு வந்த சிரமங்களை வெகுவாகக் குறைக்கும் என்பதோடு, நமது நீதி வழங்கும் அமைப்பின் மீதான அவர்களின் நம்பிக்கையையும் வலுப்படுத்தும்' என்றார்.

சர்க்கரை விலை: தட்டுப்பாட்டை தடுக்க நடவடிக்கை

புது தில்லி, ஆக. 28: மத்திய உணவுத் துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'சர்க்கரை விலை மற்றும் இருப்பை தொடர்ந்து உணவுத் துறை அமைச்சகம் கண்காணித்து வருகிறது. தற்போது இந்தியாவில் சர்க்கரை பற்றாக்குறை இல்லை.

சர்க்கரை ஆலைகளில் அதிகாரிகள் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோது சில ஆலைகளில் அனுமதிக்கப்பட்டதைவிட அதிக அளவிலும், சில ஆலைகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட விற்பனை அளவைவிட குறைவாகவும் சர்க்கரையை விற்பனை செய்தது தெரியவந்தது.

மாதத் தொடக்கத்தில் ஆலைகளால் விற்பனை செய்யப்பட்ட சர்க்கரையை மாத இறுதியில் வியாபாரிகள் வாங்கியதாலும் அல்லது விநியோகிக்கப்பட்டதாலும் செயற்கை தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் தற்போது சர்க்கரை ஆலைகளுக்கான மாதாந்திர விற்பனை ஒதுக்கீடு செப்டம்பர் முதல் 14 நாள்களாக குறைக்கப்படுகிறது. இந்த முறையின்கீழ் சர்க்கரை ஆலைகள் தங்களிடம் உள்ள மொத்த சர்க்கரை அளவில் குறைந்தபட்சம் 40 சதவீதத்தை முதல் வாரத்திலும், மீதமுள்ளவற்றை இரண்டாவது வாரத்திலும் விற்பனை செய்ய வேண்டும். இதன்மூலம் சந்தையில் சர்க்கரைக்கான தேவை மற்றும் விநியோகம் உடனடியாக கண்காணிக்கப்பட்டு அதற்கேற்ற வகையில் விரைந்து நடவடிக்கை எடுக்க முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

KVB கரூர் வைஸ்யா பேங்க் Smart way to bank

தி கரூர் வைஸ்யா பேங்க் லிட்.
Asset Recovery Branch : R.S.எண்.170/9, உத்தங்குடி கிராமம்
மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகில், மதுரை – 625107.
போன் : 0452–2587113, 2587112, இ–மெயில் : kvbl1859 @ kvbmail.com

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ஒரக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையுறுதி (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ–ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்/கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்/கள் மற்றும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கடன் வழங்கிய வங்கியில் பிணையத்திற்குள்ளான/ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, **தி கரூர் வைஸ்யா பேங்க் லிட், பாலையங்கோட்டை கிளையின்** (பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்), அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆக்கபூர்வ (Constructive) கவாதீனம் செய்து கொள்ளப்பட்டது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள **கடன்தாரர்கள்/ உத்தரவாதமளித்தவர் : 1. M/s.ஆரா மோட்டார்ஸ் (கடன்தாரர்), பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள் : திரு.சிவரமணன்.K** மற்றும் **திரு.அருண் குமார்.K,** பதிவு அலுவலக முகவரி : எண். S–54/9, KK நகர்–A, NH–7, நாகர்கோயில் நெடுஞ்சாலை, திருநெல்வேலி – 627 007, **2. M/s.மாவேரிக் மோட்டார்ஸ் (கடன்தாரர்), (பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள்) திரு.சிவரமணன்.K மற்றும் திரு.அருண்குமார்.K,** பதிவு அலுவலக முகவரி : 200/1A3, அயன்பாப்பாகுடி கிராமம், விமானநிலைய ரோடு, மதுரை – 625 022, **3. திரு.சிவரமணன்.K (பங்குதாரர் / சொத்தின் உரிமையாளர்),** த/பெ.K.S.கார்த்திகேயன், கொங்கணாபுரம் ஹவுஸ், H 131, பெரியார் நகர், ஈரோடு – 638 001, **4. திரு.அருண் குமார்.K (பங்குதாரர் / சொத்தின் உரிமையாளர்),** த/பெ.K.S.கார்த்திகேயன், கொங்கணாபுரம் ஹவுஸ், H 131, பெரியார் நகர், ஈரோடு – 638 001, **5. திரு.சண்முகம்.A.M (உத்தரவாதமளித்தவர் / சொத்தின் உரிமையாளர்),** த/பெ.A.M.முத்துசாமி, 48A, வித்யா நகர், திண்டல் மேல், ஈரோடு – 638 012 ஆகியோரிடமிருந்து கடன் வழங்கிய வங்கிக்கு வரவேண்டிய நிலுவைத் தொகை **ரூ.16,51,94,887.50 (ரூபாய் பதினாறு கோடியே ஐம்பத்து ஒரு லட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து எண்ணூற்று எண்பத்து ஏழு மற்றும் பைசா ஐம்பது மட்டும்) [(M/s.ஆரா மோட்டார்ஸ்** (பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள் : திரு.சிவரமணன்.K மற்றும் திரு.அருண் குமார்.K) **க்காக : 1. SOD-RE - க/கு எண். 1174.280.1410 : ரூ.8,39,37,408.82** மற்றும் **01.08.2026 தேதியிலிருந்து** தொடரும் வட்டி; **2. GECL-WCTL – க/கு எண். 1174.809.122 : ரூ.29,78,392.76** மற்றும் **06.08.2026 தேதியிலிருந்து** தொடரும் வட்டி; **3. Short term Loan - க/கு எண். 1174.782.119 : ரூ.88,57,089.40** மற்றும் **25.08.2026 தேதியிலிருந்து** தொடரும் வட்டி மற்றும் **M/s.மாவேரிக் மோட்டார்ஸ்** (பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள் : திரு.சிவரமணன்.K மற்றும் திரு.அருண் குமார்.K) **க்காக : 4. SOD-RE - க/கு எண். 1174.280.1422 : ரூ.6,94,21,996.52** மற்றும் **01.08.2026 தேதியிலிருந்து** தொடரும் வட்டி)] மற்றும் **வட்டி** மற்றும் பிற செலவுகளின் நிலுவைகளுக்காக **'எங்குள்ளதோ உள்ளபடி' 'என்ன உள்ளதோ அப்படியே'** மற்றும் **'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி'** என்கிற நிலையில் **30.09.2026** தேதி அன்று **(காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை)** விற்பனை செய்யப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாளர் அசையாச் சொத்துக்களின் இ–ஏலத்தினை, 'எங்குள்ளதோ உள்ளபடி' 'என்ன உள்ளதோ அப்படியே' மற்றும் 'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி' என்கிற நிலையில் நடத்த முடிவு செய்துள்ளபடியால், கீழ்வரும் சொத்துக்களை வாங்குவதற்கு, இ–டெண்டர் வழியில் ஆபர்கள் வரவேற்கப்படுகிறது.

அட்டவணைச் சொத்து :

அட்டவணை – A : (K.அருண்குமார் மற்றும் K.சிவரமணன் ஆகியோரின் அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் விபரம்) : சொத்து எண்.1 : ஈரோடு மாவட்டம், ஈரோடு பதிவு மாவட்டம், ஈரோடு சார் பதிவு மாவட்டம், ஈரோடு தாலூகா, ஈரோடு டவுன், பழைய வருவாய் வார்டு எண்.1, பழைய பிளாக் எண்.20, பழைய டவுன் சர்வே எண்.600/2 பகுதி, 603/2 பகுதி, தற்போதைய புதிய மறுசர்வே வார்டு E, புதிய பிளாக் எண்.23 மற்றும் 21, புதிய டவுன் சர்வே எண்.2/1 பகுதி, 6/1 பகுதியில் ஈரோடு வீட்டுவசதி அலகு, பெரியார் நகரில், **இனம் எண்.I – HIG மனை எண்.131 (மறுசர்வே வார்டு–E, புதிய பிளாக் எண்.21, புதிய டவுன் சர்வே எண்.6/1) : எல்லைகள் :** HIG மனை எண். 130க்குக் கிழக்கு, HIG மனை எண். 132க்கு மேற்கு, 50 அடி அகல கிழமேல் ரோட்டுக்கு வடக்கு, LIG மனை எண். 21 மற்றும் 22க்குத் தெற்கு. **அளவுகள் :** கிழமேல் இருபுறமும் 40 அடி, தென்வடல் இருபுறமும் 80 அடி. ஆகமொத்தம் மேற்சொன்ன அளவுகள் கொண்ட 3200 சதுர அடி சொத்து. **இனம் எண்.II – HIG மனை எண்.130ன் கிழபுறப்பகுதி (மறுசர்வே வார்டு–E, புதிய பிளாக் எண்.23, புதிய டவுன் சர்வே எண்.2/1) : எல்லைகள் :** HIG மனை எண்.130ன் மேற்புறப் பகுதிக்குக் கிழக்கு, HIG மனை எண். 131க்கு மேற்கு, 50 அடி அகல கிழமேல் ரோட்டுக்கு வடக்கு, LIG 23 மற்றும் 24க்குத் தெற்கு. **அளவுகள் :** கிழமேல் இருபுறமும் 15 அடி, தென்வடல் இருபுறமும் 80 அடி. ஆகமொத்தம் மேற்சொன்ன அளவுகள் கொண்ட 1200 சதுர அடி சொத்து. மொத்தம் 3200 + 1200 = 4400 சதுர அடி நிலத்துடன் அதில் கட்டப்பட்டுள்ள RCC தார்க் கட்டிடமும், அதன் பிற அனைத்து இணைப்புகளுடன் பொது வழித்தட உரிமைகளும் சேர்ந்த சொத்து. தற்போதைய ஈரோடு மாநகராட்சி எல்லைக்குள் வார்டு எண்.44ல் அமைந்துள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.6,20,00,000/– (ரூபாய் ஆறு கோடியே இருபது லட்சம் மட்டும்)
முன்வைப்புத் தொகை (ரிசர்வ் விலையின் 10%) : ரூ.62,00,000/– (ரூபாய் அறுபத்து இரண்டு லட்சம் மட்டும்)
ஏலக் கேட்பு உயர்வு : ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்)

அட்டவணை – B : (A.M.சண்முகத்தின் அடமானம் வைக்கப்பட்ட சொத்து) : சொத்து எண்.2 : ஈரோடு மாவட்டம், ஈரோடு பதிவு மாவட்டம், ஈரோடு சார் பதிவு மாவட்டம், ஈரோடு தாலூகா, ஈரோடு டவுன், முன்னாள் நகராட்சி வார்டு 12, தற்போதைய நகராட்சி வார்டு – 14, அலிமேடு வீதி, பழைய டவுன் சர்வே எண்.273/2ல் சென்னை நகர திட்டமிடல் துறை இயக்குநர் அங்கீகாரம் மற்றும் ஈரோடு நகராட்சி ஆணையாளர் அங்கீகார எண். TP/DTP/5/58ன்படி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் மனை எண்.12ன் பகுதியான அட்டவணைச் சொத்தின் **எல்லைகள் :** ஈல்வரமூர்த்திக்குச் சொந்தமான மனை எண்.11க்குக் கிழக்கு, 4.6 அடி அகல தென்வடல் வழித்தடத்துக்கு மேற்கு, 40 அடி அகல கிழமேல் அகில்மேடு வீதி–க்கு வடக்கு, குருநாதனுக்குச் சொந்தமான சொத்துக்குத் தெற்கு. **அளவுகள் :** கிழமேல் இருபுறமும் 27 அடி, தென்வடல் இருபுறமும் 61.9 அடி. இவ்வளவுகள் கொண்ட 1667¼ சதுர அடி சொத்துடன் அங்குள்ள RCC தார்க் வீட்டுக் கட்டிடமும், அதன் பிற அனைத்து இணைப்புகளும், பொது சாலை உபயோக உரிமைகள் சேர்ந்த சொத்து, தற்போது ஈரோடு மாநகர் மாநகராட்சி எல்லைக்குள் டவுன் சர்வே எண்.55 பகுதியில், பிளாக் எண்.16, புதிய வார்டு A ல் அகில்மேடு வீதி எண்.4ல் கதவு எண்.15 உடன் உள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.1,80,00,000/– (ரூபாய் ஒரு கோடியே எண்பது லட்சம் மட்டும்)
முன்வைப்புத் தொகை (ரிசர்வ் விலையின் 10%) : ரூ.18,00,000/– (ரூபாய் பதினெட்டு லட்சம் மட்டும்)
ஏலக் கேட்பு உயர்வு : ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்)

அட்டவணை – C : (K.அருண்குமார் மற்றும் K.சிவரமணன் ஆகியோரின் அடமானம் வைக்கப்பட்ட சொத்து) : சொத்து எண்.3 : ஈரோடு மாவட்டம், ஈரோடு பதிவு மாவட்டம், ஈரோடு சார் பதிவு மாவட்டம், ஈரோடு தாலூகா, வெண்டிபாளையம் கிராம மறுசர்வே எண்கள் 52/2, 52/3, 52/4, பழைய க.க.எண்கள் 105, 106 ஆகிய சர்வேக் களங்களில் அடங்கிய 5.25 ஏக்கரினுட்பட்ட 3.25 ஏக்கர் நிலம், இதே கிராமத்தில் பழைய க.க.எண்.105ல் உள்ள 3.74 ஏக்கர் நிலத்தினுட்பட்ட 2.00 ஏக்கர் நிலத்தில் 0.21 ஏக்கர் விஸ்தீரண நிலம் (மறுசர்வே எண்.53/2) ஏற்கனவே விற்பனை செய்யப்பட்டு விட்டபடியால் மீதமுள்ள 1.79 ஏக்கர் நிலம் ஆக மறுசர்வே எண்.52/2 மற்றும் 53/2ல் மொத்தம் 3.25 + 1.79 = 5.04 ஏக்கர் நிலம் மற்றும் பொது ரோடுகளின் உபயோக உரிமை முதலியன சேர்ந்த சொத்து. (பட்டா மற்றும் புன்செய் நிலம் சான்றின்படி உள்ளது). இதே கிராமத்தில் மறுசர்வே எண்கள் 52/2, 52/3, 52/4ல் உள்ள அட்டவணை சொத்தின் **எல்லைகள் வருமாறு :** வடக்கு : வெண்டிபாளையம் கிராம மறுசர்வே எண்.52/1 (வண்ணான் குட்டை), கிழக்கு : வெண்டிபாளையம் கிராம மறுசர்வே எண்.51, மேற்கு : ஈரோடு "C" கிராம எல்லை, தெற்கு : வெண்டிபாளையம் கிராம மறுசர்வே எண்.53 நிலம். மேற்சொன்ன எல்லைகளுக்குட்பட்ட 4.85 ஏக்கர் விஸ்தீரண நிலத்துடன் அதன் பொது ரோடுகள் உபயோக உரிமைகள் முதலியன சேர்ந்த சொத்து.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.14,80,00,000/– (ரூபாய் பதினான்கு கோடியே எண்பது லட்சம் மட்டும்)
முன்வைப்புத் தொகை (ரிசர்வ் விலையின் 10%) : ரூ.1,48,00,000/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து எட்டு லட்சம் மட்டும்)
ஏலக் கேட்பு உயர்வு : ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்)

அறியவரும் வில்லங்கம் : அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் அறிவுக்கும், பெற்ற தகவலுக்கும் ஏற்ப, மேற்படி சொத்துகளுக்கு வில்லங்கம் ஏதும் இல்லை. இருப்பினும் ஏலம் கோர விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்களது தனிப்பட்ட சொந்த விருப்பத்தின் பேரில் வில்லங்கம் குறித்த தங்கள் சந்தேகங்கள், ஏலத்தில் விடப்படும் சொத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் உரிமைகள் மற்றும் உரிமை கோரல்கள் / பிற உரிமைகள் / நிலுவைகள் போன்ற காரணிகள் போன்றவற்றை ஏலக்குறிப்பிடு சமர்ப்பிக்கும் முன்னரே நிவர்த்தி செய்து கொள்ளவேண்டும். இ–ஏல விளம்பரம் வங்கியின் மீது எந்த ஒரு பிரதிநிதித்துவத்தை நிறுவலோ அல்லது எந்த ஒரு அரப்பணிப்பு ஏற்பாட்டிற்கும் காரணமாகவோ அமையாது என்பதை அறியவும். பின்னாளும் சொத்துகள் வங்கி அறிந்தும் அறியாமலும் உள்ள எந்த ஒரு நடப்பு அல்லது பின்னர் எழும் வில்லங்கங்களுடனே விற்பனை செய்யப்படுகிறது. எந்த ஒரு மூன்றாம் நபர் கோரிக்கைகள் / உரிமைகள் / நிலுவைகளுக்கும் அங்கீரிக்கப்பட்ட அலுவலர் / பாதுகாக்கப்பட்ட கடன்தாரோர் எல்லையிலும் பொறுப்பாகமாட்டார்கள்.

சொத்தினைப் பார்வையிடும் நாள்	29.08.2026 முதல் 29.09.2026 வரை (காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை), இடைப்பட்ட வங்கியின் அனைத்து வேலை நாளிலும்.
ஆன் லைன் டெண்டர் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கக் கடைசித் தேதி மற்றும் நேரம்	தேதி : 29.09.2026 நேரம் : மாலை 5.00 மணி
இ–ஏலத் தேதி மற்றும் நேரம்	இ–ஏலம் நடைபெறும் தளம் (போர்டல்) : https://bankauctions.in/ (இ–ஏல சேவையாளரின் இணையதள முகவரி) 30.09.2026 (புதன்கிழமை) காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை. ஏலம் முடிவடையும் வரை ஒவ்வொன்றும் 5 நிமிட அளவற்ற நீட்டிப்புகளுடன்.
நோடல் வங்கியின் கணக்குப் பெயர்	தி கரூர் வைஸ்யா பேங்க் லிட்., மத்திய அலுவலகம் A/c. M/s.Aura Motors And M/s.Maverick Motors பெயரில் A/c No :- 1101351000000973 IFSC code:- KVBL0001101
தொடர்பு கொள்ள வேண்டியவர் மற்றும் போன் எண்.	ARB முதன்மை மேலாளர் – 95855 95881. வசூல் அதிகாரி : 99421 48790 விற்பனை வசூல் அதிகாரி : 8925982893 மின்னஞ்சல் : arbmadurai@kvbmail.com

விற்பனையின் விரிவான நிபந்தனை விபரங்கள் வேண்டுவோர் எமது வங்கியின்/பாதுகாக்கப்பட்ட கடனீத்தவரின் இணையதளத்தின் (www.kvb.co.in/Property under Auction) லிங்க்கில், மேலும் சேவையாளர் M/s. 4 களோசர் இணையதளத்தினை (https://bankauctions.in/) பரிசீலிக்கவும்.

சர்பாஸிச்சட்டம் 2002ன் கீழ் விதி 8(6)ன்படியான சட்டப்பூர்வ 30 நாள் விற்பனைக்கு முந்தைய ஏல அறிவிப்பு

கடன் பெற்றோர்/உத்தரவாதமளித்தவர்கள் மேலே குறிப்பிட்டவாறு செலுத்தும் வரையான நாள் வரை வட்டி, இதர செலவினங்களை ஏலம் நடைபெறும் நாள் முன்னர் செலுத்திவிடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தவறினால் சொத்துக்கள் ஏலம் விடப்பட்டு/ விற்பனை செய்யப்பட்டு கணக்கு நேர் செய்யப்படும். அப்படியும் நிலுவை ஏதேனுமிருப்பின் வட்டி செலவினங்களுடன் நிலுவை வசூலிக்கப்படும் என்பதை அறிவிக்கப்படுகிறது.

தேதி : 27.08.2026
இடம் : மதுரை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/முதன்மை மேலாளர்
தி கரூர் வைஸ்யா பேங்க் லிட்.

சுவாதீன அறிவிப்பு

இப்படிக்கு, Arcil-Trust-2026-007 என்ற அறக்கட்டளையின் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும் **'அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிட்டெட்' ("ஆர்சில்")** ன் அதிகாரப்பூர்வ அலுவலர், பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, மற்றும் நிதிச்சொத்து அமலாக்கம் சட்டம் 2002 (2002 ம் வருடத்தின் 54 வது சட்டம்) (மேற்சொன்ன "சட்டம்") ன் கீழும், மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(12) – உடன் படிக்க – பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ("மேற்சொன்ன விதிகள்") ன் விதி 3 ன் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை செயலுறுத்தியும், **15.09.2025** தேதிய கோரிக்கை அறிவிப்பை அனுப்பி, கடன் எண். **FEDTRUSTL0487568** ன் கீழான கடன்தாரர்கள், **பரமானந்தம் தேவராஜ் P.** ஜாமின்தாரர்கள் மற்றும் அடமானதாரர்(களான) **கவிதா பரிமளம், இசக்கு மாசிலாமணி, கனகபதி** ஆகியோரை அவருக்கு மேற்சொன்ன அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்சொன்ன கடன் வசதி தொடர்பாக **13.08.2025** ம் தேதியின் படி நிலுவையாக உள்ள தொகை **ரூ. 6,20,966.36/- (ரூபாய் ஆறு இலட்சத்து இருபதாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து ஆறு மற்றும் பைசா முப்பத்து ஆறு மட்டும்)** மற்றும் **14.08.2025** முதல் தொகை செலுத்தப்படும் வரை / பணமாக்கப்படும் வரை ஒப்பந்த விதத்தில் மேற்கொண்டு வரும் வட்டி உள்ளிட்ட தொகையை மேற்சொன்ன அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து **60 நாட்களுக்குள்** செலுத்த கோரினார்.

இதன் மேற்குறிப்பிட்ட கடன்தாரர் / ஜாமின்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) மேற்சொன்ன அறிவிப்பில் உள்ள நிலுவைத்தொகையை செலுத்த தவறிவிட்டனர், அதனால் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பு மூலம், கடன்தாரர் / ஜாமின்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில், மேற்சொன்ன சட்டம் 2002 பிரிவு 13(4) - உடன் படிக்க - மேற்சொன்ன விதிகளில் விதி 8 ன் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை செயலுறுத்தி, இதன் கிழக்கையொப்பமிட்ட நபர், இதன் கீழ் விவரிக்கப்பட்ட சொத்துக்களை **2026 ஆகஸ்ட் 22** ம் தேதியன்று கவாதீனம் எடுத்துள்ளார்.

குறிப்பாக, கடன்தாரர்கள் / ஜாமின்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், இதன் மேற்குறிப்பிட்ட அசையா சொத்து மீது எந்த வில்லங்கமும் ஏற்படுத்த வேண்டாம், அவ்வாறு ஏற்படுத்தும் எந்த வில்லங்கமும் **ஆர்சில்** - க்கு செலுத்தப்பட வேண்டிய **02.07.2026** ம் தேதியின் படி, மேற்சொன்ன கடன் வசதிக்கான கடன் பொறுப்புத்தொகை **ரூ.7,41,569.34/- (ரூபாய் ஏழு இலட்சத்து நாற்பத்து ஒன்றாயிரத்து அறுபத்து ஒன்பது மற்றும் பைசா முப்பத்து நான்கு மட்டும்)** மற்றும் **03.07.2026** முதல் தொகை செலுத்தப்படும் வரை / பணமாக்கப்படும் வரை ஒப்பந்த விதத்தில் மேற்கொண்டு வரும் வட்டி, அனைத்து நிகழ் செலவுகள் கட்டணங்கள் மற்றும் இதர செலவுகள் உள்ளிட்ட தொகைக்கு கட்டுப்பட்டது.

இதன் மேற்குறிப்பிடப்பட்ட அசையா சொத்தை மீட்க உள்ள கால அவகாசம் தொடர்பாக, மேற்சொன்ன சட்டம் பிரிவு 13 உட்பிரிவு (8) ன் கீழ் கடன்தாரர்கள் / ஜ